SLAB
SRI LANKA ACCREDITATION BOARD

# இலங்கை தர நிர்ணய சபை

## வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

# வெற்றிடங்கள்

இலங்கை தர நிர்ணய சபை என்பது 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கைக்கான தேசிய அங்கீகார அதிகார சபையாகும். மேலும் இது ஆய்வுகள் / அளவுத்திருத்த ஆய்வகங்கள், மருத்துவ ஆய்வகங்கள், (ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சான்றிதழ்களை சரிபார்த்தல் மற்றும் துல்லியத்தன்மை) என்பவற்றிற்கு பொறுப்பானதாகும். வர்த்தக அமைச்சின் கீழ் தற்போது செயல்படுவதுடன், SLAB ஆல் இயக்கப்படும் அங்கீகார திட்டங்களுக்காக SLAB IAF MLA மற்றும் ILAC MRA ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இணக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தர நிர்ணய சபை (SLAB) இன் பின்வரும் பதவிகளுக்கு இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத) - 02 வெற்றிடம்

**தகைமைகள் :**

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் முதல் இருப்பில் ஆறு பாடங்களில் சித்தியுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் சாதாரன சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
   - i. சிங்களம் / தமிழ்
   - ii. ஆங்கில மொழி
   - iii. கணிதம்

மற்றும்

2. விஞ்ஞானம், கணிதம், தொழிநுட்பம் அல்லது வணிக பிரவில் க.பொ.த (உ/த) பரீட்சையில் தோற்றி ஒரு இருப்பில் மூன்று பாடங்களில் (பொதுப்பரீட்சை அல்லாமல்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

3. அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனமொன்றில் கணனி பொறிமுறைகள் தொடர்பிலான 06 மாத சான்றிதழ் கற்கையை நிறைவு செய்திருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் :**

பின்வரும் தகுதிகளைக் கொண்ட முதன்மை நிலை-திறமை, முதன்மை நிலை-அரைதிறன் மற்றும் முதன்மை நிலை-திறமையற்ற பிரிவுகளின் பணியாளர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

**கல்வித்தகைமைகள் :**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் சாதாரன சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

- i. சிங்களம் / தமிழ்
- ii. ஆங்கில மொழி
- iii. கணிதம்

**ஏனையவை :**

மேற்கண்ட பணியாளர் பிரிவின் கீழ் நிரந்தர பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை வழங்கியிருக்க வேண்டும்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் 06 மாதகால கணனிக் கல்வியினை கற்றதற்கான சான்றிழலினை கொண்டிருத்தல்.

நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பிருந்த எந்தவொரு சேவைக் காலமும் அல்லது எந்தவொரு பதவிக்கும் நிரந்தர அடிப்படையில் நியமனம் செய்வதற்கு முன்னர் நிபந்தனையாக பயிற்சியின் கீழ் முடிக்கப்பட வேண்டும். மேலே குறிப்பிட்டபடி தகுதிக்குத் தேவையான ஐந்து வருட சேவைக்குள் கணக்கிடப்படக்கூடாது. ஏதேனும் சாதாரண / தற்காலிக அடிப்படையில் சேவைக் காலம் இந்த நோக்கத்திற்காக கணக்கிடப்படக்கூடாது.

**சம்பள குறியீடு மற்றும் மாத சம்பள அளவு : MA 1-2 - 2016 – ரூபா. 27,910 - 10x300 - 7x350 - 12x600 - 12x710 = 49,080**
**நியமனத்தின்போது அடிப்படைச் சம்பள அளவு : ரூபா. 27,910**

**வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

**உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் இரண்டாம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை :**

எழுத்து மூல பரீட்சை மற்றும் / அல்லது நேர்முகப்பரீட்சை மூலமாக தேர்வுகள் நடைபெறும்

## வாகன ஓட்டுனர் - 01 வெற்றிடம்

**தகைமைகள் :**

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியுடன் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் வழங்கிய உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் வழங்கிய உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

முதன்மை திறனற்ற (PL1) பிரிவில் உள்ள பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்தல்

**சம்பள குறியீடு மற்றும் மாத சம்பள அளவு : PL3 - 2016 -ரூபா [26,290 –10x270-10 x 300 –10 x 330 - 12 x 350 = 39,490 ]**

**நியமனத்தின்போது அடிப்படைச் சம்பள அளவு : ரூபா. 26,290**

**வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

**உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் இரண்டாம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை :**

தொழிற்திறன் ஆய்வு பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை மூலமாக தேர்வுகள் நடைபெறும்

**ஏனையவை :**

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும். பிற நன்மைகள் ஊழியர் சேமலாப நிதியம் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 3% பங்களிப்பு வழங்கப்படும். மேலும் நீங்கள் மருத்துவ காப்பீட்டுக்கு (அக்ரஹாரா) தகுதியுடையவர்களாவர்.

**அனைத்து விண்ணபத்தாரர்களும் :**

- i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- ii. பதவியின் கடமைகளை நன்கு நிறைவேற்றவும், நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றவும் கூடிய உடல் மற்றும் மனரீதியான திடகாத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- iii. நேர்மையான ஒழுக்காற்றுத் தன்மையை கொண்டவராக இருத்தல் வேண்டும்

**விண்ணப்பிக்கும் முறை :**

### முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத)

அனைத்து விண்ணப்பதாரர்களும் எமது அதிகாரப்பூர்வ வலைத்தளமான **www.slab.lk, (https://www.slab.lk/career/),** மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும், நிகழ்நிலை மூலம் விண்ணப்பித்த பின்னர் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2024.02.28** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த கல்விச்சான்றிதழ்களின் நகல் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலமாக பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்ப செயல்முறையின் போது நிகழ்நிலையில் விண்ணப்பிக்கப்பட விண்ணப்பம் மற்றும் பதிவுத் தபால் மூலமாக அனுப்படும் விண்ணப்பம் இரண்டும் தேவை.

### வாகன ஓட்டுனர்

விண்ணப்பங்கள் **2024.02.28**ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த கல்விச்சான்றிதழ்களின் நகல் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலமாக பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். அரச அல்லது அரசுசார் திணைக்களங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

விரிவான விளம்பரம் எமது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது **( https://www.slab.lk )**

தலைவர்

**இணக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தர நிர்ணய சபை,**

**இல - 44, விசேட பொருளாதார சந்தை, கிரிமண்டல மாவத்தை,**

**நாராஹேன்பிட்ட.**

SELACINE